# தமிழ்நாடு
# மாநில தேர்தல் ஆணையம்

## வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான கையேடு
(மின்னணு வாக்குப்பதிவு வாக்குச்சாவடி)

Hand Book for Polling Personnel
in Urban Local Body Election
[where EVMs are used]
Booklet - 2

## கையேடு 2
## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள்
## 2011

*(அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)*

# வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான கையேடு

**(மின்னணு வாக்குப்பதிவு வாக்குச்சாவடி)**

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் - 2011

## தமிழ்நாடு
## மாநில தேர்தல் ஆணையம்

**சென்னை**

# வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான கையேடு
## (மின்னணு வாக்குப்பதிவு வாக்குச்சாவடி)

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் - 2011
(அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

©
2011
1,35,000 பிரதிகள்

தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் வெளியீடு

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்**
ஜவஹர்லால் நேரு சாலை (100 அடி சாலை),
அரும்பாக்கம், சென்னை 600 106.

தொலைபேசி எண்கள் : 2475 3001 - 2475 3002
நிகரி 2475 3300 - 2475 1870
E-mail ID : tnsec@tn.nic.in
Web : www.tnsec.tn.nic.in

அச்சிட்டோர்

**அரசு மைய அச்சகம்,**
சென்னை 600 079.

# உள்ளடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| நியமனமும் பயிற்சியும் | 1 |
| வாக்குச்சாவடிக்கு வருதல் | 1 |
| தேர்தல் அலுவலர் குழு | 2 |
| வாக்குச்சாவடியின் முதலாவது அலுவலரின் பணிகள் | 2 |
| வாக்குச்சாவடியின் இரண்டாவது அலுவலரின் பணிகள் | 3 |
| வாக்குச்சாவடியின் மூன்றாவது அலுவலரின் பணிகள் | 4 |
| வாக்குச்சாவடியின் நான்காவது அலுவலரின் பணிகள் | 4 |
| மூன்றாவது மற்றும் நான்காவது வாக்குப்பதிவு அலுவலர்களின் முக்கிய கடமைகள் | 5 |
| வாக்குப் பதிவின் முடிவில் செய்ய வேண்டிய கடமைகள் | 5 |
| தேர்தல் பணியிலுள்ள வாக்காளர்கள் (அலுவலர்கள்) வாக்களிக்கும் முறை | 6 |

# வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான கையேடு

## 1. முன்னுரை

நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின்போது வாக்குச்சாவடியில், வாக்குப்பதிவு அலுவலர்களாக பணியாற்றவுள்ள நீங்கள், இத்தேர்தல்களில் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி அறிந்து கொள்ளவும், அப்பணிகளில் ஏற்படும் ஐயங்களைப் போக்கிக் கொள்ளவும் இக்கையேடு பெரிதும் உதவும். நீங்கள் இக்கையேட்டினை நன்கு படித்து, உங்கள் பணி குறித்த விவரங்களை அறிந்து கொள்வதுடன், இதுபற்றிய சட்டம் மற்றும் வாக்கெடுப்பு விதிமுறைகளையும் அறிந்து வைத்திருப்பது நன்று.

## 2. நியமனமும் பயிற்சியும்

தேர்தல் பணிக்கென நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், தேர்தல் நடத்தும் அலுவலர் உங்களுக்கு முறைப்படி, தேர்தல் பணிக்கான நியமன ஆணையிவினைப் பிறப்பிப்பார். மேலும், உங்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு 2 அல்லது 3 தேர்தல் வகுப்புக்கள் நடத்தப்படும். இதற்காக பயிற்சி அளிக்கப்படும் நாள், நேரம், இடம் குறித்து உங்களுக்குத் தேர்தல் நடத்தும் அலுவலரால் அறிவிக்கப்படும். இது உங்களைத் தேர்தல் பணிக்கு தயார் செய்யும் பயிற்சி வகுப்பாக அமைவதுடன், உங்களுடன் பணியாற்றவுள்ள இதர அலுவலர்களுடன் பழகி கலந்துரையாடவும் வாய்ப்பளிக்கும். மேலும், இப்பயிற்சி வகுப்புக்களில், தேர்தல் அலுவலர்கள், வாய்மொழி மூலம் உங்கள் கடமைகளைப் பற்றி விளக்குவதுடன், செய்திப் படங்கள் மற்றும் மாதிரி வாக்குப்பதிவு (Mock Poll) மூலமும் விளக்க வாய்ப்புள்ளது. உங்கள் சந்தேகங்களை நேரடியாகக் கேட்டுத் தெரிந்து, விளக்கங்கள் பெறவும் இது வாய்ப்பு அளிக்கும். ஆதலால், இந்தப் பயிற்சி வகுப்புக்களில் நீங்கள் தவறாது, தவிர்க்காது, அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

## 3. வாக்குச்சாவடிக்கு வருதல்

வாக்குப்பதிவுக்கு வேண்டிய தேர்தல் சாதனங்கள், தேர்தலுக்கு முதல் நாளே மண்டல அலுவலரால் வாக்குச்சாவடியில் ஒப்படைக்கப்படும். எனவே நீங்கள் தேர்தல் நடப்பதற்கு முந்தைய நாள் பகல் 12 மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வந்துவிட வேண்டும். உங்கள் வாக்குச்சாவடிக்குரிய வாக்குச்சாவடி தலைமை அலுவலரும், அதே நேரத்தில் வாக்குச்சாவடியில் இருக்குமாறு பணிக்கப்பட்டிருப்பார். தேர்தலுக்கு முந்தைய நாளன்று ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களுக்கான கையேட்டில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. வாக்குச்சாவடிக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்தல், வாக்குச்சாவடியில் தரப்படும் தேர்தல் சாதனங்களைச் சரிபார்த்துப் பெற்றுக் கொள்ளுதல், வாக்குப்பதிவு கருவிகளை வாக்குப்பதிவுக்குத் தயார்படுத்திக் கொள்ளல் மற்றும் வாக்குச்சாவடி அமைந்துள்ள இடத்தில் ஒட்டப்பட வேண்டிய விளம்பரத்தாள்கள்/சுவரொட்டிகள் (Posters) ஆகியவை குறித்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்களிலும் நீங்கள் அவருக்குத் துணை நிற்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், வாக்குச்சாவடித் தலைமை அலுவலரும் இதர தேர்தல் அலுவலர்களும் ஒரே குழுவினராக (one team) அமைந்து, வாக்குச்சாவடியில் நடைபெற வேண்டிய அனைத்து பணிகளையும் ஆற்ற வேண்டும். மறுநாளில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவிற்குத் தேவையான அனைத்து

ஏற்பாடுகளையும், முன்தினமே செய்து முடிப்பதுடன், வாக்குப்பதிவு நாளன்று நீங்கள் காலை 6.00 மணிக்கே வாக்குச்சாவடியில் பணியாற்ற உங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

**4. தேர்தல் அலுவலர் குழு**

ஒரு வாக்குச்சாவடியில், தலைமை அலுவலருடன் நான்கு வாக்குப் பதிவு அலுவலர்களைக் கொண்ட குழு பணிபுரியும். அவர்களின் பணிகுறித்து கீழே விளக்கப்பட்டுள்ளது.

**5. வாக்குச்சாவடியின் முதலாவது வாக்குப்பதிவு அலுவலரின் பணிகள்**

- வாக்காளரின் அடையாளம் கண்டறிதல்,
- மேயர்/தலைவர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலுக்கு பொறுப்பு,
- மேயர்/தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் பதிவேட்டு பராமரிப்பு, மற்றும் மேயர்/தலைவர் தேர்தலுக்கான துண்டுச்சீட்டினை வழங்குவதற்கு பொறுப்பு

வாக்குச்சாவடிக்குள் நுழைந்ததும் வாக்காளர் நேராக வாக்குப்பதிவு முதலாவது அலுவலரிடம் செல்வார். வாக்குச்சாவடியின் முதலாவது அலுவலர் வாக்காளர்களை அடையாளம் காண்பதற்கும் மேயர்/தலைவர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலை பராமரிப்பதற்கும் (Marked copy of electoral roll) பொறுப்பாவார்.

வாக்காளர் ஒவ்வொருவரும், ஏதேனுமொரு அடையாளச் சீட்டுடன் வரலாம். அந்தச் சீட்டு சாதாரண வெள்ளைத்தாளில் இருக்க வேண்டும். அதில் வாக்காளரின் பெயர், வாக்காளர் பட்டியலில் அவருடைய தொடர் எண், வாக்காளர் பட்டியல் பகுதி எண், அவர் வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்கலாம்.

அந்தச் சீட்டில் வேட்பாளரின் பெயர் மற்றும்/அல்லது அவருடைய கட்சியின் பெயர் மற்றும்/ அல்லது அவருக்கு ஒதுக்கப்பட்ட சின்னத்தின் மாதிரிப்படம் ஆகிய எவையும் இருக்கக் கூடாது. வாக்காளரிடம் அத்தகையச் சீட்டு எதுவும் இல்லையென்றால், அடையாளச் சீட்டைக் கொண்டு வருமாறு அவரை கட்டாயப்படுத்தக்கூடாது. அவ்வாறு அடையாளச் சீட்டு கொண்டு வரவில்லையென்று அவரைத் திருப்பி அனுப்பிவிடக்கூடாது. வாக்குச்சாவடி அலுவலரே அவரது பெயர், வீட்டு எண். முதலியவற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அவரது பெயரை வாக்காளர் பட்டியலில் கண்டுபிடிக்க வேண்டும். அதன் பின்னர் வாக்காளரின் அடையாளத்தை சரிபார்க்க வேண்டும்.

ஆள் மாறாட்டத்தைத் தவிர்த்திடும் பொருட்டும் வாக்காளரை சரியாக அடையாளம் காணும் பொருட்டும் வாக்குப்பதிவின்போது வாக்காளர்களிடமிருந்து தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை ஏற்றுக்கொண்டு வாக்காளரை அடையாளம் காண வேண்டும். அவ்வாறு ஆணையம் நிர்ணயித்துள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைத் தாக்கல் செய்ய இயலாத வாக்காளரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது.

வாக்காளர் ஒருவரின் அடையாளம் பற்றி வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல்/வாக்குச் சாவடி முகவர் எதிர்ப்புத் தெரிவித்தால் அந்த வாக்காளரை உரிய விசாரணைக்கும், நடவடிக்கைக்கும் வாக்குச்சாவடியின் தலைமை அலுவலரிடம் அனுப்ப வேண்டும்.

வாக்காளரின் அடையாளம் சரிபார்த்தவுடன் அவ்வாக்காளர் அடையாளம் குறித்து ஆட்சேபம் இல்லையென்றால், அவரது பெயரை வாக்காளர் பட்டியலில் பொருத்தமான பதிவுகளில் உள்ள விவரங்களுடன் சரி பார்த்தபின், வாக்குச்சாவடி முகவர்களுக்கும், உறுப்பினர் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளுக்கு பொறுப்பு வகிக்கும் வாக்குச் சாவடியின் மூன்றாவது அலுவலருக்கும் கேட்கும்படி, பக்க எண்., தொடர் எண், வாக்காளரின் பெயர் ஆகியவற்றை

உரத்த குரலில் சொல்ல வேண்டும். வாக்காளர் பட்டியலிலுள்ள எழுத்துப் பிழைகளையும், அச்சுப் பிழைகளையும் பொருட்படுத்தக் கூடாது.

மேற்கண்டவாறு வாக்காளரை அடையாளம் கண்டவுடன் மேயர்/தலைவர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலில் சரி (✓) குறியிட வேண்டும். அனைத்து வாக்குச்சாவடியாக இருந்தால், பெண் வாக்காளருக்கு சரி (✓) குறியீட்டுடன் அவரது பெயரை அடிக்கோடிட்டு காட்ட வேண்டும். இது வாக்குப்பதிவின் முடிவில் அந்த வாக்குச்சாவடியில் வாக்களித்த ஆண் வாக்காளர்கள் எத்தனை பேர் என்பதையும், பெண் வாக்காளர்கள் எத்தனை பேர் என்பதையும் கணக்கிட்டு காட்ட முடியும்.

வாக்காளர் பட்டியலில் மேற்கண்டவாறு குறிமிடப்பட்டவுடன் வாக்காளரை இரண்டாம் வாக்குப்பதிவு அலுவலரிடம் அனுப்ப வேண்டும். இரண்டாம் வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளருக்கு அடையாள மையிடுவார். அடையாள மையிட்டவுடன் வாக்காளர் மீண்டும் முதலாம் வாக்குப்பதிவு அலுவலர் வருவார். பின்னர், முதலாம் வாக்குப்பதிவு அலுவலர் மேயர்/ தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) பதிவு செய்து வாக்காளரின் கையொப்பம் அல்லது இடது கை பெருவிரல் ரேகை பெற வேண்டும். வாக்காளர் ஒருவரின் இடது கை பெருவிரல் இல்லாவிடத்து அவரின் வலது கை பெருவிரலின் பதிவை பெறுதல் வேண்டும். இரண்டு பெருவிரல்களுமே இல்லையெனில், இடது கை விரல்களில் சுட்டு விரல் தொடங்கி யாதேனுமொரு விரலில் பதிவை பெறுதல் வேண்டும். இடது கையில் விரல்கள் இல்லையெனில் வலது கையின் விரல்களில் சுட்டு விரல் தொடங்கி யாதேனுமொரு விரலின் பதிவைப் பெறுதல் வேண்டும். விரல்கள் எவையும் இல்லாதவிடத்தும் வாக்காளர் தம்முடைய வாக்குச்சீட்டில் குறியீடு செய்திட இயலாத நிலையில் அனுமதிக்கப்பட்டத் துணையாளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவினை பெற வேண்டும்.

வாக்காளரின் ஒப்பம்/ரேகை பெற்றபின்னர் மேயர்/தலைவர் தேர்தலில் வாக்களிப்பதற்கான துண்டுச்சீட்டை வழங்க வேண்டும். மேலும், வாக்குச்சாவடியின் முதலாவது அலுவலர் வாக்குச்சாவடியில் வாக்களிக்கும் வாக்காளரின் எண்ணிக்கை குறித்தான கணக்கினை முறைப்படி மேற்குறிப்பிட்ட பதிவேட்டில் பராமரித்திடல் வேண்டும்.

**6. வாக்குச்சாவடியின் இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலரின் பணிகள்**

அழியாத மைக்கான பொறுப்பு அலுவலர்.

இரண்டாவது வாக்குப்பதிவு அலுவலரின் பொறுப்பில், அழியாத மை இருக்கும். இவர் வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலில் விரல் நகத்தின் மேலிருந்து கீழ் தோல் பகுதிவரை அழியாத மையினால் கோடிட்டு மை நன்றாகப் பரவும்படி அழியாத மையினால் அடையாளம் ஒன்றை இட வேண்டும். வாக்காளரின் விரலில் அடையாளம் இடுவதற்கு முன்னால் விரலில் எண்ணெய் போன்ற பொருள் ஏதாவது இருந்தால் அதைத் துணியினால் துடைத்து நீக்கி விட வேண்டும். ஒருவருக்கு இடது கையில் ஆள்காட்டி விரல் இல்லையென்றால் இடது பக்கத்திலுள்ள அடுத்த விரல் ஏதேனும் ஒன்றில் மையிடலாம். இடது கையில் விரல்களே இல்லை என்றால் வலக்கை ஆள்காட்டி விரல் அல்லது அதே போல் பக்கத்திலுள்ள வேறு விரல் ஏதேனும் ஒன்றில் மையிடலாம். இரண்டு கைகளிலும் விரல்களே இல்லையென்றால் அவரது இடது அல்லது வலது கையின் முனையில் மையிட வேண்டும். ஆள்காட்டி விரலில் அடையாளக் குறியை இட்டவுடன் அதனை அழித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வாக்காளர் ஒருவர், தனது விரலில் அடையாளக் குறியிட மறுத்தாலும் அல்லது விரலில் ஏற்கெனவே அடையாளக் குறி இருந்தாலும் அல்லது அந்த மையை அகற்றுவதற்கு அவர் எச்செயலேனும் செய்தாலும் அவரை வாக்களிக்க அனுமதிக்கப்படக் கூடாது.

வாக்காளர் எவரேனும் சரும நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அவருக்குக் குறியிட, மற்றவர்களுக்கென அளிக்கப்பட்ட பொதுவான பிளாஸ்டிக் குச்சியைப் பயன்படுத்தக் கூடாது. அத்தகைய வாக்காளர் ஒவ்வொருவருக்கும் குறியிடுவதற்காக வெவ்வேறு தனித்தனி சிறு

குச்சியைப் பயன்படுத்தி விட்டு உடனடியாக அவற்றை எறிந்து விட வேண்டும். அழியாத மைக் குறியிட்டவுடன் வாக்குச்சாவடியின் மூன்றாவது அலுவலரிடம் போகும்படி அந்த வாக்காளரிடம் சொல்ல வேண்டும்.

ஏற்கெனவே தேர்தல் நடந்து இரத்து செய்யப்பட்டு மறு வாக்குப்பதிவு (Fresh poll) நடக்கும்பட்சத்தில் வாக்காளர்களின் இடது கை நடுவிரலில் அழியாத மை இட வேண்டும். ஏனெனில் வாக்காளர்களின் இடது கை ஆட்காட்டி விரலில் ஏற்கெனவே அழியாத மை இடப்பட்டிருக்கும்.

வாக்காளருக்கு அடையாள மையிட்ட பின்னர், வாக்காளர் பதிவேட்டில் (படிவம் 21) பதிவுகளை மேற்கொள்ளவும், மேயர்/தலைவர் தேர்தலில் வாக்காளிப்பதற்கான துண்டுச்சீட்டை பெற்றுக்கொள்ளவும் வாக்காளரை முதலாம் வாக்குப்பதிவு அலுவலரிடம் அனுப்பி வைத்திட வேண்டும்.

### 7. வாக்குச்சாவடியின் மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலரின் பணிகள்

உறுப்பினர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலுக்கும், வாக்காளர் பதிவேட்டிற்கும், உறுப்பினர் தேர்தலுக்கான துண்டுச்சீட்டினை வழங்குவதற்கும் மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் பொறுப்பு வகிப்பார். மேலும், மேயர்/தலைவர் தேர்தலுக்கான கட்டுப்பாட்டுக் கருவிக்கும் பொறுப்பு வகிப்பார்.

இவர் மேயர்/தலைவர் தேர்தலுக்கு வாக்களிக்க முதலாவது வாக்குப்பதிவு அலுவலரால் வழங்கப்பட்டுள்ள துண்டுச் சீட்டினை (voters slip) பெற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் உறுப்பினர் தேர்தலுக்கான குறியீட்டு வாக்காளர் பட்டியலில் சரி (✓) குறியிட்டவுடன் பின்னர், உறுப்பினர் தேர்தலுக்கான வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்து வாக்காளரின் கையொப்பம் அல்லது ரேகையினைப் பெற்றுக்கொண்டு உறுப்பினர் தேர்தலில் வாக்களிப்பதற்கான துண்டு சீட்டினை வழங்க வேண்டும். அதன் பின்னர், மேயர்/தலைவர் தேர்தலுக்கான வாக்கினை பதிவு செய்யும்பொருட்டு வாக்காளரை வாக்குப்பதிவு செய்யும் மறைவுப் பகுதிக்கு அனுமதிக்க வேண்டும். துண்டுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் படியே சற்றும் முறை பிறழாமல் வாக்காளரை கண்டிப்பாக அனுமதித்தல் வேண்டும். மேயர்/தலைவர் தேர்தலுக்கான கட்டுப்பாட்டுக் கருவியின் (control unit) தொடர்புடைய பொத்தானை (button) அழுத்தி வாக்களிப்பு மறைவுப் பகுதியில் உள்ள வாக்குப்பதிவுக் கருவியினை/கருவிகளை (balloting unit) செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். வாக்காளர் வாக்களிப்பு மறைவுப் பகுதிக்கு செல்வதற்கு முன்னர் அவரது இடது கை ஆள்காட்டி விரலில் அடையாள மை இடப்பட்டமைக்கான அடையாளம் உள்ளதா என்பதையும் மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலர் பரிசீலித்து உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### 8. வாக்குச்சாவடியின் நான்காவது வாக்குப்பதிவு அலுவலரின் பணிகள்

உறுப்பினர் தேர்தலுக்கான கட்டுப்பாட்டுக் கருவி இவருடைய பொறுப்பிலிருக்கும்.

மேயர்/தலைவர் தேர்தலுக்கான வாக்குப்பதிவினை மேற்கொண்ட பின்னர் வாக்காளர் நான்காவது வாக்குப்பதிவு அலுவலரிடம் வருவார். உறுப்பினர் தேர்தலுக்கு வாக்களிக்க மூன்றாவது வாக்குப்பதிவு அலுவலரால் வழங்கப்பட்ட துண்டுச் சீட்டினை (voters slip) நான்காவது வாக்குப்பதிவு அலுவலர் வாக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். உறுப்பினர் தேர்தலுக்கான துண்டுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் படியே சற்றும் முறை பிறழாமல் வாக்காளரை உறுப்பினர் தேர்தலுக்கான வாக்களிப்புப் பகுதிக்கு அனுப்ப வேண்டும். உறுப்பினர் தேர்தலுக்கான கட்டுப்பாட்டுக் கருவியின் (control unit) தொடர்புடைய பொத்தானை

(button) அழுத்தி வாக்களிப்பு மறைவுப் பகுதியில் உள்ள வாக்குப்பதிவுக் கருவியினை/ கருவிகளை (balloting unit) செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். வாக்காளர் வாக்களிப்பு மறைவுப் பகுதிக்கு செல்வதற்கு முன்னர் அவரது இடது கை ஆள்காட்டி விரலில் அடையாள மை இடப்பட்டமைக்கான அடையாளம் உள்ளதா என்பதையும் நான்காவது வாக்குப்பதிவு அலுவலர் பரிசீலித்து உறுதி செய்து கொண்டு வாக்காளரை வாக்குச்சாவடியினை விட்டு வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும்.

### 9. மூன்றாவது மற்றும் நான்காவது வாக்குப்பதிவு அலுவலர்களின் முக்கிய கடமைகள்-

மூன்றாவது மற்றும் நான்காவது வாக்குப்பதிவு அலுவலர்களின் பணிகள் மிகவும் முக்கியமானவையாகும். தேர்தல் வெற்றிகரமாக நடந்து முடிவது, அவர்களுடைய விழிப்புணர்வைப் பொறுத்ததாகும். அவர்களுடைய பணி, வாக்குப்பதிவு இயந்திரத்தை செயல்பட வைப்பதற்காக, பட்டனை அழுத்துவது என்ற எளிமையான பணியாக மட்டுமல்லாமல், வாக்காளர் துண்டுச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான வரிசையின் அடிப்படையில் ஒவ்வொரு வாக்காளரும் அவருடைய வரிசைப்படி வாக்களிக்கின்றனரா என்று கவனிக்க வேண்டியதும் அவர்களுடைய பொறுப்பாகும். வாக்காளரை வாக்குப்பதிவு செய்வதற்காக அனுமதிக்கும்போது, அந்த வாக்காளர் சரியான வாக்குப்பதிவு அடைப்புப் பகுதிக்குச் செல்கின்றாரா என்றும் மற்றும் சரியான முறையில் வாக்களிக்கின்றாரா என்றும் அவர்கள் கண்காணிக்க வேண்டும். வாக்குப்பதிவு செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட யாதொரு வாக்காளரும் அறியாமல் அல்லது வேறு வகையில் எங்கு செல்ல வேண்டும் மற்றும் என்ன செய்ய வேண்டும் என்று அறியாதவராக இருப்பதாக அவர்களுக்குத் தோன்றுமாயின் வாக்காளர் சரியான நடைமுறைகளைப் பின்பற்றுகிறாரா என்பதைக் கண்டறிய வேண்டியது இவ்வாக்குப்பதிவு அலுவலர்களின் பொறுப்பாகும். வழக்கமாக வாக்குப்பதிவு தொடங்கிய முதல் ஒரு மணி நேரத்தில் நெரிசல் மிகுதியாக இருக்கும். அப்போது அவர்கள் பொறுமையைக் கடைபிடித்து வாக்குப்பதிவு தங்கு தடையின்றி நடைபெறுமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். வாக்குப்பதிவு தொடங்கிய பின்னர் நேரம் கிடைக்கும்போது எவ்வாறாயினும் ஒவ்வொரு மணி நேரத்திலும் அதுவரை பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை வாக்காளர் பதிவேட்டின் எண்ணிக்கையுடனும் அவரவர் பொறுப்பிலுள்ள கட்டுப்பாட்டு கருவியில் தெரிகின்ற மொத்த எண்ணிக்கையுடனும் ஒப்பிட்டுச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். வாக்காளர் வாக்குப்பதிவு செய்துவிட்டுச் செல்லுவதற்கு முன்னர் வைக்கப்பட்ட அழியாத மை அடையாளம் அழியாமல் உள்ளதா என்பதையும் சரி பார்த்து உறுதி செய்யவேண்டும்.

### 10. வாக்குப் பதிவின் முடிவில் செய்ய வேண்டிய கடமைகள்

வாக்குப்பதிவின் முடிவில், அனைத்து வாக்காளர்களும் தங்கள் வாக்கினைப் பதிவு செய்ததும் வாக்குப்பதிவு அலுவலர்கள் தங்கள் வசம் உள்ள குறியீட்டுப்படியினைச் சோதித்து எத்தனை வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்துள்ளனர் என்பதையும், அவர்களில் ஆண்கள், பெண்கள் எத்தனைபேர் என்பதையும் கணக்கிட்டு, அதைத் தலைமை அலுவலருக்கு தெரிவிக்க வேண்டும். மேலும், தலைமை அலுவலர் வாக்குப் பதிவின் முடிவில் செய்ய வேண்டிய கடமைகளான வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு அரக்கு முத்திரை வைத்தல், படிவங்களைத் தயாரித்தல், சட்டமுறையான மற்றும் சட்டமுறை சாரா படிவங்களை (Statutory and non-statutory forms) அவற்றிற்கான உறைகளில் வைத்து மூடுதல் ஆகியவற்றில் அவருக்கு உதவி புரிய வேண்டும். மேலும் வாக்குப்பதிவு முடிந்த பின்பு வாக்குச்சாவடிக்கு வழங்கப்பட்ட சாதனங்களையும் இதர கணக்குகளையும் தலைமை அலுவலர், மண்டல அலுவலருக்கு ஒப்படைக்கும் வரை, மற்ற வாக்குப்பதிவு அலுவலர்களும் உடனிருந்து தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

## 11. தேர்தல் பணியிலுள்ள வாக்காளர்கள் (அலுவலர்கள்) வாக்களிக்கும் முறை -

தேர்தல் பணிக்காக நியமிக்கப்படும் அலுவலர்கள் தங்களது வாக்கினை நகரப்புற உள்ளாட்சித் தேர்தல் விதிகளின்விதி 50-ன்படி அஞ்சல் வாக்குச்சீட்டு மூலம் பதிவு செய்திடலாம்.

ஒரு வாக்காளர் தான் வாக்களிக்கத்தக்க வாக்குச் சாவடியினிற்று பிறிதொரு வாக்குச்சாவடிக்கோ அல்லது பிற தேர்தல் பணிக்காகவோ நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப்படும்போது அவர் படிவம் 15-ல் (தேர்தல் பணி நியமன ஆணை நகலுடன்) தான் வாக்களிக்க வேண்டிய பகுதிக்கு பொறுப்பான தேர்தல் நடத்தும் அலுவலருக்கு முறையே வாக்குப்பதிவு நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகவோ அல்லது தேர்தல் நடத்தும் அலுவலரால் நிர்ணயிக்கப்படும் குறுகிய காலத்திற்குள்ளோ விண்ணப்பித்து அஞ்சல் வாக்களிக்க ஏதுவாக படிவம் 16-ல் ஆன "தேர்தல் பணிச்சான்று" (EDC) மற்றும் அஞ்சல் வாக்குச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அவ்வாறு அஞ்சல் வாக்குச் சீட்டினை பெற்ற பின்னர், அவர் தனது வாக்கினை தான் விரும்பும் வேட்பாளரது பெயர் அல்லது சின்னத்தின் எதிரே "சரிக்குறியீடு" (✓) இட்டு பதிவு செய்திடல் வேண்டும். மேற்படி "சரிக்குறியீடு" (✓) வாக்குச்சீட்டில் வேட்பாளரது பெயர் மற்றும் சின்னம் அடங்கிய பகுதியினுள் எங்கு வேண்டுமானாலும் இடப்படலாம். பின்னர், வாக்காளர், படிவம் 17-லான உறுதிமொழியினை பூர்த்தி செய்து கையொப்பமிடல் வேண்டும். அதன் பின்னர் அஞ்சல் வாக்குச்சீட்டினை அதற்கென வழங்கப்பட்டுள்ள உறையினுள் (inner cover) வைத்து உறையினை ஒட்டியோ அல்லது சீலிட்டோ வைத்திடல் வேண்டும். பின்னர் இவ்வுறையினை பிறிதொரு உறையான வெளிஉறையில் (outer cover) வைத்து, தேர்தல் பணிச்சான்று மற்றும் மேற்படி உறுதிமொழிப் படிவம் 17 ஆகிய ஆவணங்களையும் வைத்து தேர்தல் நடத்தும் அலுவலருக்கு தபால் மூலமோ அல்லது தகவலாள் மூலமாகவோ அல்லது தன்னால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் (authorised person) மூலமோ வாக்கு எண்ணுகைக்கு முந்தைய நாளன்று மாலை 6.00 மணிக்குள் கிடைக்குமாறு சேர்ப்பித்தல் வேண்டும்.

உரிய காலம் முடிவடைந்த பின்னர் கிடைக்கப்பெறும் மேற்படி உறைகள் பிரிக்கப்படவோ மற்றும் அவ்வுறையுனுள் அடங்கிய வாக்குகள் கணக்கிடப்படவோ மாட்டாது. வாக்கு எண்ணுகையின்போது வெளிஉறைகள் ஒன்றன்பின் ஒன்றாக திறக்கப்பட்டு விதி 50ன் படியான படிவம் 17-ல் ஆன உறுதிமொழி மற்றும் தேர்தல் பணிச்சான்று ஆகியவை ஒன்றாக சேகரிக்கப்பட்டு எண்ணப்பட்டு, தனி உறையில் முத்திரையிட்டு வைக்கப்படும்.

மேற்படி படிவம் 17-ல் உறுதிமொழி காணப்படவில்லை என்றாலோ அல்லது முறையே கையொப்பமிடப்படாமலிருந்தாலோ அல்லது ஏற்கத்தகாத பிற குறைபாடுகள் இருப்பினோ வாக்குச்சீட்டு அடங்கிய உள்உறை திறக்கப்படாமல் உரிய பதிவுகள் தேர்தல் நடத்தும் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு உள்அடங்கிய வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும்.

மேற்கூறிய விதிமுறைகளுக்கேற்ப வாக்குப்பதிவு அலுவலராகிய நீங்கள் உங்களது அஞ்சல் வாக்கினை பதிவு செய்வதற்கான உரிய வழிமுறைகளை மேற்கொண்டிடலாம்.

* * *